


# பரிசுத்த பவுல் தமிழ் திருச்சபை

## அஹமதி - குவைத்

## செய்தி மலர்


## மே மாதம் 2025

# கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்,

சங்கீதம் 138:8

**இதழ் : 26 மலர் : 21**

# முதன்மை ஊழியரிடமிருந்து...



கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள். இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கடந்த மாதம் விசேஷித்த நாட்களில் ஆராதனைகளை நடத்த தேவன் பாராட்டின கிருபைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பாரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி கர்த்தருக்கு பயந்து உண்மையும் உத்தமுமாய் ஊழியம் செய்ய ஜெபிப்போம். வருகின்ற மாதத்தில் கர்த்தர் விரும்புகிறபடி புதிய ஊழியப் பொறுப்பாளர்களை கர்த்தர் தேர்ந்தெடுக்கவும் ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**"இந்த இயேசுவை தேவன் எழுப்பினார், இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்"** (அப். 2:32) என்று தங்கள் சொந்த கண்களால் பார்த்த அப்போஸ்தலர்கள் சாட்சியாக கூறுகிறார்கள்: 1கொரி. 15:4-7, யோவா. 20:19 & 26, லூக். 24:30-31, அப். 1:22 ... ... மேலும் அநேக வேத வாக்கியங்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக, மீறுதல்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்தார் என்று உறுதிப்படுத்துகிறது: நாமும் விசுவாசிக்கின்றோம்.

பவுல் எபேசியருக்கு எழுதுகின்ற பொழுது; **"அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்"** (எபே. 2:1) என்றும்: கொலோசியருக்கு எழுதுகின்ற பொழுது **"ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலும் அவரோடேகூட எழுந்தவர்களாகவும்"** (கொலோ. 2:12) இருக்கிறோம் என்ற நம்பிக்கையைப் பெற்றிருக்கிற நாம்: **"சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்"** (மாற் 16:15) என்று உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவிடமிருந்து உண்டான கட்டளை நம்மேல் இருக்கிறது என்பதை மறவாதீர்.

இனிமேலும் மௌனமாயில்லாதபடி இயேசு கிறிஸ்து எல்லாருடைய பாவங்களுக்காகவும் மரித்து உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை பிறருக்கும் அறிவித்து **"இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்"** (எபி. 10:10) என்ற விசுவாசத்தின் நிச்சயத்தை பிறர்க்கும் எடுத்துரைத்து, இயேசுவை அறியாதவர்கள் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், அவர்களும் நம்மை போல இயேசுவை தொழுது கொள்ளவும் நம்மை நாமே இயேசுவின் பாதத்தில் அர்ப்பணித்து தேவ பணிசெய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தேவன் தாமே எல்லோருக்கும் உன்னத பெலத்தையும் ஆசீரையும் அளவில்லாமல் தந்தருள்வாராக. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

கர்த்தர் கிருபையில்,

**சகோ. ஆரோக்கியதாஸ்**

---

**கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !**

**தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. கிறிஸ்டோபர் அவர்களிடத்திலும்,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்கிளின் அவர்களிடத்திலும்,**

**போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும்,**

**ஆலயம் கட்டுமான ஊழியத்திற்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஜெகநாதன் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

# உன் கரமே என் கருவறை

தாயின் கருவறையில் பத்து மாதம் - என்
தகப்பனின் கரம் அதிலே மொத்த காலம்
கருவறை இருட்டினிலே கண்டேன் உன் வெளிச்சத்தை
ஈன்றெடுக்கும் என் தாயும் என் பேரை அறியும் முன்னே
பெயர் சொல்லி அழைத்தவரே - பெரியவனாக்கினீரே
சிறுமையில் இருந்த என்னை சிறப்பாய் மாற்றிடவே
சித்திரமாய் வரைந்தீரே உன் உள்ளங்கைகளிலே - நான்
யாருக்கு அஞ்சுவேன் உன் கரத்தில் இருக்கையிலே
எதற்கும் பயமில்லை உன் முகத்தை பார்க்கையிலே
இன்னல்கள் என் வாழ்வில் நாள்தோறும் இருந்தாலும்
எதிரிகள் எனைச் சூழ்ந்து அழித்திட நினைத்தாலும்
ஜெயங்கொண்டு எதிர்கொள்வேன்
உம் வார்த்தையெனும் பட்டயத்தால்
கருவறை இருட்டினில் விடுதலை கண்டேன்
உந்தன் வெளிச்சத்தில்
வாழ்வின் இருளிலும் விடியலை காண்பேன்
உந்தன் கிருபையினால். ஆமென்.

அன்பு சகோதரி
K.வனிதா

## அன்பு

போலித்தனம் இல்லாத புன்னகை சுயநலமில்லாத உறவு
கைமாறு கருதாத உதவி கவலைகளை மறக்க வைக்கும்
எதிர்பார்ப்பில்லாத அன்பு அமைதியாக இருக்கும்
மனிதனிடம் மொத்த பிரபஞ்சமும் சரணடைந்து விடும்.

சகோதரி.விஜயகுமாரி சுந்தரராஜ்

# தேவச் செய்தி

**"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது"** (1 கொரிந்தியர் 1:18).

இந்த அறிக்கையை பவுல் கொரிந்தியருக்கு எழுதிய தன்னுடைய முதல் கடிதத்தில் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறார். அவருடைய அறிக்கையில் சிலுவை என்ற ஒற்றைச்சொல் மனிதரை இரண்டு துருவங்களாக பிரிப்பதைக் காண்கிறோம். கெட்டுப் போகிறவர்கள்; இரட்சிக்கப்படுகிறவர்கள் என்பதே அவை. நாம் எந்தப்பக்கத்தில் இருக்கிறோம் என்பதை நாம் ஆராய வேண்டும்.

கடந்த சில வாரங்களாக நாம் சிலுவையைக் குறித்து தியானித்து வந்தோம். சிலுவையுடன் நாம் அனைவரும் பின்னிப் பிணைந்தோம். அந்த செய்திகள் அனைத்தும் நமக்குள் என்ன மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது? என்பதை சிந்திக்க வேண்டிய தருணம் இது. சிலுவை நமக்கு பெலனைத் தந்திருக்கிறதா? அல்லது அது நம் கண்களுக்கு இன்னும் பைத்தியமாகவே தெரிகிறதா?

**தேவபெலன்:-**

**'நமக்கோ"** என்பது சிலுவையை விசுவாசிக்கும் விசுவாசக் கூட்டத்தார் என்பதை நாம் அறியலாம். அதாவது சிலுவை; அதனை விசுவாசிப் பவர்களுக்கு கர்த்தருடைய பெலனைத் தருகிறது என்பது பவுலின் செய்தி. அது எப்படி?

சிலுவை தருவது ஆவிக்குறிய பெலன். ஆகையால் தான் இதனை 'தேவ"பெலன் என்று சொல்லுகிறார். இந்த ஆவிக்குரிய பெலன் சரீரத்திலும் பெலனை உருவாக்குகிறது. உயிரற்ற சடலமாகக் கிடந்த ஆதாமின் உடலில் கர்த்தருடைய ஆவி சென்றபோதோ அவன் உயிர்பெற்று எழுந்து நின்றான். அந்த தேவ பெலனைக் கொண்டு உலகை ஆளவும்; தன்னைப் போன்ற இன்னொரு மனிதனை உருவாக்கவும் அவனால் முடிந்தது. ஆக கர்த்தருடைய ஆவி

நம்முடைய ஆத்துமாவுக்குள் வரும்போது நம்முடைய சரீரத்திலும் தேவபெலன் வெளிப்படும். அந்த பெலனைக் கொண்டு உலகை ஆளவும் உலக ஆசீர்வாதங்களை பெருக்கிக்கொள்ளவும் நம்மால் முடியும். இதனை நமக்குள் உண்டு பண்ணியது சிலுவைச் செய்திகளே.

சிலுவை மன பெலனையும் நமக்குள் உருவாக்குகிறது. பிசாசு நம்முடைய மனதையே முதலில் தாக்குகிறான். மனபெலன் என்பது கட்டடத்தின் அஸ்திபாரம் போன்றது. அது அசைந்தால் கட்டிடம் விழுந்துவிடும். ஆகையால் தான் கர்த்தர் அவ்வப்போது நம்மிடம் வந்து திடன்கொள் என்று நம்மை பெலப்படுத்துகிறார். பிசாசு நம்மனங்களில் ‘நீ ஒரு பாவி. உனக்கு கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் கிடைக்காது” என்றெல்லாம் சொல்லி நம் அஸ்திபாரத்தை அசைக்கும்போது; சிலுவை குறுக்கிட்டு; ‘இல்லை; இல்லை. உன் பாவங்கள் அனைத்தும் என்மீது சுமத்தப்பட்டு அழிந்துவிட்டது. நீ ஒரு நீதிமானே” என்று விளக்கிக்காட்டி மனதை ஸ்திரப்படுத்தும். இதனை பேதுருவின் வாழ்விலும் நாம் காணலாம். இயேசுவைத் தெரியாது என்று சொல்லி சபிக்கவும் சத்தியம் செய்யவும் துணிந்த அந்த தொடைநடுங்கிப் பேதுரு; சிறிது நாட்களில் மூவாயிரம் மனிதருக்கு முன்னே எழுந்து நின்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பெலசாலி பேதுருவாக மாறினார். இந்த மன பெலன் நமக்குள் வரவேண்டும்.

**சிலுவை உணர்த்தும் மேலும் சில இரகசியங்கள் என்ன?**

கிறிஸ்துவுடன் சிலுவையில் மரிப்பவர்கள் மீண்டும் உயிரடைவார்கள். அவர்களுக்கு நித்திய மரணம் இல்லை. அவர்கள் கர்த்தருடன் இணைந்து பிசாசின் தலையை நசுக்குவார்கள். அவர்கள் மீது உள்ள கர்த்தருடைய திட்டம் உறுதியாக நிலைத்திருக்கும். அதற்கு மரணம் இல்லை. தாவீதைப்போல அவர்கள் துணிச்சலுடன் கோலியாத்களை எதிர்கொண்டு வெற்றிபெறுவார்கள். இந்த அனைத்து செய்திகளும் நமக்குள் செல்லும்போது மிக ஆழமான தேவ பெலன் நம்மிடத்தில் வெளிப்படும்.

இடைவிடாமல் சிலுவையை தியானித்த உங்களுக்குள் ஆவிக்குரிய பெலன் வந்ததை உணருகிறீர்களா? இல்லையேல் இந்த செய்திகளை விசுவாசித்து தேவ பெலனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**பைத்தியம்:-**

கெட்டுப் போகிறவர்களுக்கு சிலுவை பைத்தியமாகவே தெரியும் என்பது பவுல் தன்னுடைய அனுபவத்திலுருந்து குறிப்பிடும் செய்தி.

ஏத்தன்ஸ் நகரில் கிறிஸ்துவின் சிலுவை பவுல் பாரத்துடன் போதித்தபோது சிலர் அவரை வாயாடி என்றும் பைத்தியக்காரர் என்றும் இகழ்ந்தார்கள் (அப். 17:32). தன்னுடைய ஆவிக்குரிய அனுபவத்தையும் தன்னுடைய ஆழமான வேத அறிவையும் இணைத்து அவர்களுக்கு போதித்தப் பின்பும் அவர்களால் சிலுவையை விளங்கிக்கொள்ள இயலவில்லை. ஏத்தன்ஸ் நகரில் வாழ்ந்த சாக்ரடிஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ போன்ற உலகின் தத்துவ ஞானிகளுடைய பிள்ளைகளுக்கு சிலுவை வைத்தியமாகவே தெரிந்தது. காரணம் சிலுவை ஒரு ஆவிக்குரிய செய்தி. அது கண்களால் காணக் கூடாது ஆத்துமாவைப் பற்றிய செய்தி. இயேசுவின் பாவநிவாரண பலி மற்றும் உயிர்த்தெழுதலை ஜென்மசுபாவமுள்ள மனிதனால் விளங்கிக் கொள்ள இயலாது.

**‘ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரிய வைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்’** (1கொரி. 2:14) என்பதையும் அவர் வெளிப்படுத்துகிறார். அவர்களால் சிலுவையை ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்க இயலாது. ஜென்மசுபாவத்தை வைத்திருந்த பவுலும் அதுபோலத்தான் இருந்தார். அவருடைய கண்கள் திறக்கப்பட்டபோதோ சிலுவை அவருக்கு வேறு விதத்தில் தெரிந்தது. அது அவருடைய ஜென்ம சுபாவத்தையும் மாற்றியிருந்தது.

ஜென்ம சுபாவங்கள் நம்முடைய ஆவிக்குரிய கண்களை மறைத்துவிடும். ஆகையால் அதனைக் குறித்து நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சிறுவயதிலே நம்முடைய பள்ளி

ஆசிரியர்கள் குறிப்பிட்ட அந்த தேவையற்ற குணங்கள் நம்மிடமிருந்து மாறிவிட்டதா? இரட்சிக்கப்பட்டபோது ஆவியானவர் வெளிப்படுத்திய அந்த குணம் நம்மை விட்டு நீங்கிவிட்டதா? இவைகளை நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். மாறவில்லை என்றால் சிலுவையின் வழியாக கர்த்தர் நமக்காக வைத்திருக்கும் அந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நம்முடைய கண்களுக்கு தெரியாது. அந்த அற்புதமான தேவ பெலனை நம்மால் அனுபவிக்க இயலாது. ஜென்ம சுபாவங்கள் கர்த்தர் நமக்காக வைத்திருக்கும் "**ஆசீரை**" அழித்து 'வாதத்தைக்" கொடுத்துவிடும்.

புவுலைப் போல நாமும் சிலுவையைக்குறித்தே அல்லாமல் நம்மைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்போம். அப்போது சிலுவையின் ஆவிக்குரிய பெலன் நம்மை நிரப்புவதை நாம் காண்போம்.

**முடிவு:-**

சிலுவையைக் குறித்த நம்முடைய ஆத்துமாவைப்பற்றிய செய்தி நமக்குள் ஆவிக்குரிய பெலனை உண்டுபண்ணட்டும். அவை நம்முடைய ஜென்ம சுபாவங்களை அழித்து; தேவ பெலனை நமக்குள் உண்டுபண்ணட்டும். சுற்றிலும் இருந்து நம்மை நெருக்குகிற கோலியாத்களை நாம் மேற்கொள்ள அவை நமக்குள் துணிவை உண்டு பண்ணட்டும். இந்த பெலனை நம்முடைய அன்பு பிள்ளைகள் பெற்றுக் கொள்ளும்படி செய்வோம். அவர்கள் உலகை ஆளட்டும்.

**கர்த்தர் கிருபையில்,**
**சகோ. ஜர்ர்ஜ் ஸ்டீபன்சன்**

## சகோதரிகள் பகுதி

இயேசு ஏன் சிலுவையில் மரிக்க வேண்டும்?

இயேசுவை நம்பினால் நமக்கு என்ன கிடைக்கும்?

இயேசுவை நாம் ஏன் நம்ப வேண்டும்?

தேவனுடைய ஆடுகள் யார்?

**தேவனுடைய உண்மையான சபை என்றால் என்ன?**

**"பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்"** (ரோம. 6:23) பாவத்தின் சம்பளம் மரணம் என்பதால் இயேசு நமக்கு பதிலாக உலகின் அனைத்து பாவிகளுக்கும் நித்திய ஜீவனை பரிசாக அளித்து தமது அன்பை வெளிப்படுத்தினார்.

**இயேசு ஏன் சிலுவையில் மரிக்க வேண்டும்?**

இயேசுவின் மரணம் உலகின் அனைத்து பாவங்களுக்கும் விலை யாக இருந்தது. மனித குலம் தங்கள் பாவங்களுக்காக நரகத்தில் எரியும் தீக்கு இரையாகும் மரணத்தை எதிர்நோக்கி இருந்தது. இயேசு நம்மை நேசித்ததால் அவர் ஏற்றுக் கொண்டார். இது நமது எல்லா பாவங்களை யும் அவர் மீது சுமத்தியது. மேலும் நம்மை இரட்சிக்க சிலுவையில் மரித்தார். அனைவரையும் பாவம், மரணம், நியாயத்தீர்ப்பு மற்றும் சாபத்திலிருந்து காப்பாற்ற சிலுவை யில் தன்னை ஒப்புக் கொடுத்தார். இயேசுவின் மரணம் மனிதகுலத்தின் பாவங்களுக்கான விலையாக இருந்தது. அவர் எல்லாப் பாவங்களையும் தானே சுமந்ததினால் மனிதனின் பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பைப் பெற அவர் சிலுவையில் மரித்து நாம் மீண்டும் நீதிமான்களாக வாழ்வதற்கு உயிர்த்தெழுந்தார்.

**இயேசுவை நம்பினால் நமக்கு என்ன கிடைக்கும்?**

**"எல்லா பாவங்களும் அழிக்கப்பட்டு ஒருவன் நீதிமானாகிறான்"** (ரோம. 8:1-2). நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதற் கான உரி மையைப் பெறுகிறோம் (யோவா. 1:12). நாம் அவருடைய ஆவியை யும் நித்திய ஜீவனையும் பெறுகிறோம் (அப். 2:38, 1யோவா. 5:11-12). நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில பரலோக ராஜ்ஜியத்தில் நுழை வோம் (வெளி_21:22). நாம் தேவனுடைய அனைத்து ஆசீர்வாதங் களையும் பெறுகிறோம். (எபே_1:3-23) தொடர்ச்சி 17-ம் பக்கம்

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்


" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி–12:2 ) "

சகோதரி. மரிய குளோரி தாஸ்
சகோதரி. தேவகிருபை
சகோதரி. கேத்ரீன் சுகன்யா
செல்வி. ஹெலன் பிராத்தனா கிறிஸ்டோபர்
செல்வன். டேரன் பென்சாம்
சகோ. ஜெரேமியா
சகோ. T. ஸ்டீபன்
சகோ. ஜோன்ஸ் செல்வா சிங்
செல்வி. ஏஞ்சலின் பிரிசில்லா ஜெகநாதன்
செல்வன். அசாரியா பிரவீன்குமார்
சகோதரி. எலிசபெத் ஸ்டாலின்
செல்வி. அனஸ்டீனா
சகோதரி. சித்ரா ராஜன்
சகோதரி. ஹெலன் ஷீஜா ராபின்ராஜ்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
சகோ. எபினேசர்
செல்வன். ஜோஸ்வா ஹெக்கல்
செல்வன். டோனி ராமமூர்த்தி
சகோ. ஜோன்ஸ்ராஜ்
செல்வன். நெல்சன் கண்ணன்
செல்வன். மில்டன் கிஷோர் பக்தராஜ்
சகோ. பாலமுருகன்
செல்வி. ரீமாரோஸ் எபினேசர்

சகோ. சாமுவேல் தாசையா
சகோதரி. தங்க மெல்பா
சகோ. குணா ஆனந்த்
சகோ. சுனில்
செல்வன். எபின் பிரைஸ் கிறிஸ்டோபர்
சகோ. தர்மர்
செல்வி. இவாஞ்சலின் சாமுவேல்
சகோ. ராஜவேல்
சகோ. ஜோஸ் யோசுவா
சகோதரி. குமுதினி வில்சன்
செல்வி. மீனாகுமாரி சுகுமாரன்
சகோ. சந்தோஷ்குமார்
செல்வி. மெர்சி தெபோராள்
செல்வன். ஆபல்ராஜ் எபினேசர்
சகோ. அந்தோனி சாமி
சகோ. பிரட்சிலின் ஜாக்சன்
சகோ. T. விஜயன்
செல்வி. ஜோயல் ஹெக்கல்
சுகோதரி. எஸ்தர் சாம்
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. அருள் நான்சி
சகோ. வடிவேல்
செல்வன். கதிரவன் சுகமாரன்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. பெபின் செல்பின்–ஏஞ்சலின்
திருமதி & திரு. சுஜின் ஹெக்கல்–லதா
திருமதி & திரு. எபினேசர்–டெய்சி
திருமதி & திரு. ஸ்டாலின்–எலிசபெத்
திருமதி & திரு. வில்சன்–வித்யா
திருமதி & திரு. எட்வின் ஞானதுரை–ரஞ்சிதகுமாரி
திருமதி & திரு. கிரன்குமார்–ஜரீன்
திருமதி & திரு. சந்தோஷ்குமார்–பிரமிளா
திருமதி & திரு. அருன் செல்வகுமார்
திருமதி & திரு. சுபின்சிங்–ஆஷ்லின் ரோனியா
திருமதி & திரு. ஜோன்ஸ்ராஜ்–நித்யா
திருமதி & திரு. எஸ்தர் ராஜ்–எலிசபெத்
திருமதி & திரு. ஜான்போஸ்கோ–ஜாய் ஷக்கினா
திருமதி & திரு. ஆல்வின் ஜுலியஸ்–அனிதா
திருமதி & திரு. எட்வர்ட் சந்தோஷ்–சாரா சவீதா
திருமதி & திரு. வினீஷ்–கேத்ரீன்
திருமதி & திரு. தாமஸ்–அல்ஜியா






# மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/5/2025 | Sis. செலின் டேவிட் | Sis. பிரிஸில்லா ஆமோஸ் |
| 11/5/2025 | சகோ. சிவகுமார் | சகோ. சாம் சுந்தர் |
| 18/5/2025 | Sis. டெய்சி எபிநேசர் | Sis. எப்சிபா ஸ்டீபன் |
| 25/5/2025 | சகோ. ஜாண்சன் | சகோ. சாம் ஆனந்த் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/5-2025 | சகோ. M. கிறிஸ்டோபர் | சகோ. சுகுமார் |
| 09/5/2025 | சகோ. ராமர் | சகோ. ஸ்டாலின் |
| 16/5/2025 | உபவாச திருவிருந்து (பாஸ்டர். ரத்தினம் பால்) | |
| 23/5/2025 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ. ஜெகநாதன் |
| 30/05-2025 | சகோ. சுபின் சிங் | சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ் |

## ஆராதனை ஒழுங்குகள்

**8/5/2025 வியாழன் அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பாஹறாகீல் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**30/5/2025 வெள்ளி அன்று வாலிபர் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹறாகீல் ஜெப வீடு – நேரம் - 6:30 PM-8:15
வேத வினா பகுதி – ஆதியாகமம்

**24/5/2025 அன்று சகோதரிகள் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹறாகீல் ஜெப வீடு – நேரம் –6:30 PM– 8:30 வேத வினா பகுதி – 1கொரிந்தியர்

**செவ்வாய் கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை
இடம் – பாஹறாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி
இடம் – பாஹறாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகமப் பள்ளி
இடம் – பாஹறாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கியக் ஜெப கூடுகை
இடம் – பாஹறாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

# மே மாதத்திற்கான வேத வினா!

**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. குத்து விளக்கு எந்த எண்ணெயினால் எரிய வேண்டும்?
2. ஆரோனின் குமாரராகிய நாதாபும், அபியூவும் எதனால் செத்தார்கள்?
3. ஐம்பதாவது வருஷத்தின் பெயர் என்ன?
4. மாம்சத்தின் உயிர் எதில் இருக்கிறது?
5. தேசத்தின் வெள்ளாண்மையை அறுக்கும் போது சிந்திக் கிடக்கிற கதிர்களை என்ன செய்ய வேண்டும்?
6. புசிக்கத்தக்க மிருகங்கள் எவைகள்?
7. ஆரோனும் அவன் குமாரரும் எத்தனை நாட்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்?
8. பஸ்கா பண்டிகை எப்போது கொண்டாடப்படுகிறது?
9. பலி செலுத்த ஆட்டுக் குட்டியைக் கொண்டுவர சக்தியில்லாதவன் வேறு எவைகளை பலி செலுத்தக் கொண்டுவர வேண்டும்?
10. அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் என்ன செய்யப்பட வேண்டும்?
11. ஆரோனின் வஸ்திரத்தில் மார் பதக்கத்தில் எவைகள் வைக்கப்பட்டது?
12. யாரை சிறுமை படுத்தக் கூடாது?
13. படைக்கும் போஜன பலி எதைக் கொண்டு சாரமாக்கப்பட வேண்டும்?
14. ஆரோன் அபிஷேகம் பண்ணப்படும் நாளில் அவனும் அவன் குமாரரும் படைக்க வேண்டிய மாவின் அளவு என்ன?
15. கர்த்தருக்கு இடும் தகனங்களில் மகா பரிசுத்தமானது எது?

குறிப்பு:- விடைகளை வருகின்ற 21-05-2025 -க்குள் WhatsApp - +965 66159784 என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். பதிலை லேவியராகமத்தில் தேடினால் காணலாம்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# ஏப்ரல் மாத வேத வினாவுக்கு விடை


1. இரண்டு மகன்கள் (யாத். 18:3-4)
2. பத்து முறை (ஆதி. 31:41)
3. சீனாய் மலை (யாத். 19:20)
4. போத்திபார் (ஆதி. 39:5)
5. மீதியான் (யாத். 3:1)
6. சத்தமிட்டு அழுதான் (ஆதி. 45:2)
7. மோசே-80, ஆரோன்-83 (யாத். 7:7)
8. நாற்பது நாட்கள் (ஆதி. 7:12)
9. தலைக்கு ஒரு ஓமர் அளவு (யாத். 16:16)
10. கோடா கோடியாய் பெருகுவாயாக (ஆதி. 24:60)
11. இருக்கிறவராகவே இருக்கிறேன். (யாத். 3:14)
12. சித்தீம் மரத்தால். நீளம்-2.5 முழம், அகலம்-1.5 முழம், உயரம்-1.5 முழம். (யாத். 37:1)
13. அரண்மனை அதிகாரி / எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன். (ஆதி. 41:40, 41)
14. சிப்போராள், பூவாள் (யாத். 1:15)
15. பெலிஸ்தருடைய தேசம் (ஆதி. 21:34)

## எப்ரல் வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.வனிதா
Sis.நகோமி ஜாண்சன்
Sis. ஜீனா சதீஸ்குமார்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis.சுகந்தி தம்புக்குமார்
Sis.ஜான்சி ராணி
Sis.மரிய குளோரி தாஸ்

Sis. பியூலா மெர்சி பால்
Sis. நித்யா ஜோன்ஸ்
Sis. சாந்தி
Sis. சுபா ஸ்டீபன்
Sis. தயா இயேசுரத்தினம்
Bro. எபினேசர்
Bro. செங்குட்டுவன்
Bro. ஜாண்சன்
Bro. பக்தராஜ்

வேத வினா பதில் எழுதிய உங்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகள்



# May Month Quiz for Children



(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What did God command?
2. To whom did Jesus say that upon this rock I will build my church?
3. The son of man has come to save that which was ________.
4. Whom did Jesus take upon a high mountain?
5. Who came to you in the way of righteousness?
6. What kind of faith ye shall have to say unto this mountain, remove hence to yonder place?
7. There is none good but one that is ____________.
8. Whose is this image and superscription?
9. Who came to see the sepulchre?
10. Where was He sitting when the disciples came unto Him privately?

Note:- ANSWERS can be taken from Matthew 15 to 28. Submit your answers to the Sunday School Teachers on or before 24.05.2025. Please mention the reference along with the answers.

## Answer for the children Quiz (April)

1. Immanuel – God is with us – Matt. 1:23
2. Jeremiah – Matt. 2:17
3. John the Baptist – Matt. 3:1
4. For they shall see God. – Matt. 5:8
5. Jesus marvelled at the centurious faith. – Matt. 8:10
6. Matthew – Matt. 9:9
7. Eye – Matt. 6:22
8. For all that labour and are heavy laden who come to Jesus. – Matt. 11:28
9. The son of man. – Matt. 12:40
10. Peter – Matt. 14:29

## CHILDREN THOSE WHO WROTE QUIZ ANSWER

1. Amish DJ, 2. Adriel Kemuel Dhas, 3. Andrea Magdalene Dhas 4. Joel Jestine, 5. Jerald Justine.

# எது பாவம் ?

**"பாவத்தின் சம்பளம் மரணம்"** (ரோமர். 6:23)

பாவம் இல்லாத மனிதன் யாரேனும் இவ்வுலகத்தில் உண்டா? எனெனில் இவ்வுலகமே பாவத்தில் தான் மூழ்கியிருக்கிறது. ஆகை யால் தான் **"நாம் அவருக்குள் நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்"** (2கொரி. 5:21) மனந்திரும்ப அவசிய மில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக். 15:7) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

நாம் வேதத்தை கேட்கிறவர்களாகவும் வாசிக்கிறவர்களாகவும் மட்டுமில்லாமல் அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். ஒருவன் பாவத்தில் அகப்பட்டு தவறான வழியில் செல்லும் போது மேலும் அவனைப்பற்றி குறை கூறி பிறரிடத்திலோ தவறாக சுட்டிக்காட்டி மேலும் மேலும் அவனை குற்ற உணர்ச்சியில் தள்ளுவதை விட அவன் மனந்திரும்புவதற்கு ஏதுவான வழியில் அவனை நடத்தி தேவனுக்கென்று ஒரு ஆத்துமாவை கொடுக்கும் போது உன் நிமித்தமும்; அவன் மனந்திரும்புதலின் நிமித்தமும் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமல்லவா.

**"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்"** (கலா.5:24). ஒருவன் கிறிஸ்தவனாய் மட்டும் வாழ்வதல்ல கிறிஸ்தவ வாழ்க்கை. கிறிஸ்துவுக்குள்; கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும் தங்களுடைய இருதயத்துக்கு ஏற்ற சுய இச்சைகளின்படி வாழாமல், உலகத்துக்கு ஏற்ற ஒத்த வேஷம் தரியாமல், **"நான்"** என்ற மேன்மையை வெறுத்து, தாழ்மையின் உருவான கிறிஸ்துவின் சாயலைத் தரித்து; வீணான சிந்தனைகள் உங்களை

மேற்கொள்ளாதபடிக்கு, எல்லாவித உலகத்தின் இச்சைகளையும் சிலுவையில் அறைந்தீர்கள் என்றால் மரணத்திற்கேதுவான பாவம் உங்களை ஆட்கொள்வதில்லை. வாழ்கின்ற ஒரு வாழ்க்கையை கிறிஸ்துவுக்கென்று வாழ்வோம் நம் ஆசை அவரை பற்றிக் கொண்டதாயிருக்கட்டும். யாரையும் குற்றப்படுத்தவோ, நியாயந்தீர்க்கவோ, நமக்கு அதிகாரமில்லை. நியா யாதிபதி கர்த்தர் ஒருவரே. **“தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்”** (1கொரி. 14:33) என்ற வார்த்தை யின்படி நாம் ஒருவரிலொருவர் அன்போடும் சமாதானத்தோடும் வாழ வேண்டுமேயன்றி பிறருக்கு விரோதமான எந்தவொரு காரியத்திலும் ஈடுபடாமல் தேவனின் நாமம் மகிமைக்கென்று ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தை எல்லாவித பாதுகாவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். சத்துருவானவன் யாரை விழுங்கலாமோ? என்று வகை தேடி காத்துக் கொண்டிருக்கிறான். தேவனுடைய பிள்ளைகளின் பரிசுத்த வாழ்வைக் கெடுத்து பாவ வழியில் நடத்திச் செல்ல உலகத்தின் காரியங்களில் அதிகமாம் கவனம் செலுத்த தீவிரமாய் செயல் பட்டுக் கொண்டிருக்கிறான்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அதற்கு இடங்கொடாமல் தேவனுடைய கற்பனைகளை கைக்கொண்டு இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அவருடைய சுதந்திரத்தில் பங்குள்ளவர்களாக வாழ ஒவ்வொருவரையும் ஒப்புக் கொடுப்போம். முடிவு பரியந்தம் கிறிஸ்துவுக்காய் வாழ்வோம். **“நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே”** (1கொரி. 3:16) தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் (1கொரி. 3:17) என்பதை நினைவில் கொண்டு பரிசுத்தத்தை காத்துக் கொள்வோமாக. கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக.

**வாலிபம் இயேசுவுக்கே..**

9-ம் பக்கம் தொடர்ச்சி

இயேசுவை நாம் ஏன் நம்பவேண்டும்? இயேசு மட்டுமே உண்மையான இரட்சகர் நரகத்திலிருந்து நம்மை மீட்கும் இரட்சகர். நம் இயேசு மட்டுமே. நாம் அனைவரும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காவிட்டால் நுகத்தில் விழக்கூடிய பாவி களாவோம். இயேசு மட்டும் உண்மையான இரட்சகர் என்பதால் நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். இயேசுவை விசுவாசித்து தங்கள் எல்லா பாவங்களிலிருந்தும் மீட்கப்பட்டவர்கள் செல்லும் இடம் பர லோக ராஜ்ஜியம். இயேசுவை விசுவாசிக்காமல் மீட்கப்படாமல் இருப்பவர்கள் இறுதியில் செல்லும் இடம நரகம். **“அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே”** (வெளி. 21:8).தேவனுடைய ஆடுகள் யார்? இயேசுவின் ஞானஸ்நானத்தையும் இரத்தத்தையும் விசுவாசித்து ஆவிக்குரிய இரட்சிப்பை பெறுவார்கள். **“இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லா மல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு”** (யோவா. 10:16). இயேசுவின் ஞானஸ்நானத்தையும்; இரத்தத்தையும் விசுவாசிப்பவர்கள் ஒரு முறை இரட்சிக்கப்பட்டு தேவனு டைய ஆடுகளாக இருக்கிறார்கள். தாங்கள் தங்களுக்கு பிடித்தவற்றை நம்புவதால் இன்னும் பாவிகளாக இருக்கிறார்கள்.

தேவனுடைய உண்மையான சபை என்றால் என்ன? தேவனு டைய சபை என்பது நீதிமான்கள் இயேசுவின் ஞானஸ்நானத் தையும்; இரத்தத்தையும் விசுவாசித்து கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்டு பரிசுத்த மாக்கப்பட்டவர்கள் ஒன்று கூடி தேவனை ஆராதிக்கும் இடமாகும். (1கொரி. 1:2) உண்மையான உறுப்பினர்களும் என்பதை நம்பும் இடமாகும். “ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் ஒரே ஞான ஸ்நானமும் தேவன் ஒருவரே அவரே அனைத்திற்கும் பிதா”.


உங்கள் சகோதரி.

**நித்யா ஜெரேமியா**

# Kids Corner

## Words of Faith for my children!

- My children are covered by the blood of Jesus
- My children will love the Lord with all their heart, soul & mind and they will love their neighbour as themselves.
- My children will grow in wisdom, stature & in favour with God & man.
- My children will have good friends who will help them to grow in Christ.
- My children will be loving, joyful, peaceful, patient, kind, good, gentle, faithful & self-controlled.
- My children are protected from harm and disaster. God will command His angels to guard them in all their ways.
- My children are guided by Holy Spirit. They will be alert & discerning, able to resist temptation, standing firm & confident in their faith.
- My children will be humble & obedient to me, their teachers & elders.
- My children will serve the Lord wholeheartedly. They will be mighty and anointed vessels in the hands of God.
- My children are blessed and will be a blessing to many people.




Fyona Sweetlyn

# கடந்த மாத நிகழ்வுள் சில















# ஊழியம் செய்ய ஜெபியுங்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்



முதன்மை ஊழியர்
**Bro. ஆரோக்கியதாஸ்**
Ph. 9987 0126



செயலாளர்
**Bro. ஆரோக்கியராஜ்**
Ph.60918793



பொருளாளர்
**Bro. ஜாண்சன்**
Ph.97610275



பெண்கள் ஐக்கிய தலைவி
**Sis. டெய்சி எபிநேசர்**
Ph.60686612



வாலிப ஐக்கிய தலைவர்
**Bro. M. கிறிஸ்டோபர்**
Ph.67096449


**Church Postal Address**
**Your Name**
**PO.Box No: 46795,**
**Fahaheel, 64018,**
**Kuwait.**

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com



Private Circulation Only